بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 18/09/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை தொடர்பாக மாநபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் ஈமானை வலுப்படுத்தும் குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝١ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝٢ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝٣ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝٤ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝٥

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝٦ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝٧

மாநபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வின் மீதான தவக்குல் தொடர்பாக குறிப்பிட்டவாறு கடந்த குத்பாவில் நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்தபோது நடந்த நிகழ்வுகளை எடுத்துக் கூறியிருந்தேன். இந்தப் பயணத்தின் மேலும் சில விவரங்கள் வரலாற்றில் கிடைக்கின்றன. அதிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தவக்குலின் மேன்மை இன்னும் தெளிவாகிறது.

ஸுராக்கா பின் மாலிக் என்பவர் குறைஷியர்கள் அறிவித்திருந்த பரிசுத்தொகை மீது கொண்ட பேராசையினால், ஹிஜ்ரத்தின்போது மாநபி (ஸல்) அவர்களையும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களையும் பின்தொடர்ந்தார். ஸுராக்கா பின்னாளில் முஸ்லிமாகி விட்டார். அவரே இந்த நிகழ்வை அறிவித்துள்ளார். அவரது கூற்றுப்படி, குறைஷியர்கள் பெருமானார் (ஸல்) அவர்களையும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களையும் உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்து வருபவருக்கு நூறு நூறு ஒட்டகங்களைப் பரிசாக நிர்ணயித்திருந்தார்கள்.

இதன்படி, கடற்கரை திசையில் மூன்று நபர்களைக் கொண்ட ஒரு குழு செல்கிறது என்பது ஸுராக்காவுக்குத் தெரியவந்ததும், அநேகமாக, இவர்கள் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களும் அவர்களுடைய தோழர்களுமாகத்தான் இருக்க வேண்டும் என்று அவர் அனுமானித்தார். எனவே, பரிசுத் தொகையில் வேறு யாரும் பங்கு பெற்று விடக்கூடாது என்பதற்காக அவர் அந்தத் தகவலை மறைத்து விட்டார். ஸுராக்கா தனது வேகமான பெண் குதிரையைக் கொண்டு வரச் செய்து, பயணக்குழுவைப் பின்தொடரத் துவங்கி விட்டார். அவர் விரைவாகவே குழுவிற்கு அருகில் சென்று விட்டார். அவருக்கு மாநபி (ஸல்) அவர்கள் திருக்குர்ஆன் ஓதும் ஓசை கேட்கும் அளவுக்கு நெருங்கி விட்டார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவ்வப்போது பின்னால் திரும்பி பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் இங்கும் அங்கும் பார்க்கவில்லை. ஸுராக்காவின் குதிரை வழக்கத்திற்கு மாற்றமாக தடுமாறி விழுந்தது. அதன் கால்கள் மணலில் புதைந்துவிட்டன. அவர் அம்பு எறிந்து குறி பார்த்தார். ஆனால், அவர் பரிசுத்தொகை மீதான பேராசையால் முன்னால் சென்று கொண்டே இருந்தார்.

இறுதியில், ஒரு கட்டத்தில் குதிரையின் கால்கள் மணலில் புதைந்து விட்டன. இந்தப் பின்தொடர்தலில் எந்த நன்மையும் இல்லை என்பதை ஸுராக்கா உணர்ந்தார். இதனால் ஸுராக்கா உயிருக்குப் பாதுகாப்புக் கோரி குரல் கொடுத்தார். மேலும், தன்னால் எந்த பாதிப்பும் ஏற்படாது என்று கூறினார். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், "அவருக்கு என்ன வேண்டுமெனக் கேளுங்கள்" என்று கூறினார்கள். ஸுராக்கா தான் பின்தொடர்வதன் நோக்கத்தை எடுத்துரைத்து, 'மக்கத்தினர் உங்கள் இருவரையும் பிடித்து வருவதற்குப் பரிசு நிர்ணயித்துள்ளனர்; நானும் இதே பேராசையினால்தான் வந்தேன்; ஆனால், எனக்கு நடந்ததை வைத்து பின்தொடர்தல் சரியானது அல்ல என்று புரிந்து கொண்டேன்' என்றார். அவர் பயண உணவுகள் மற்றும் பயணத்துக்கான பொருட்களையும் சமர்ப்பித்தார். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. "எங்களைப் பற்றி யாருக்கும் தெரிவிக்க வேண்டாம்" என்று மட்டுமே கூறினார்கள்.

ஸுரக்கா வாக்குறுதி அளித்ததுடன், ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் எழுதிக் கேட்டுக் கொண்டார். நபி பெருமானார் (ஸல்) அவர்களின் கட்டளைக்கிணங்க அவருக்குப் பாதுகாப்பு மடல் எழுதித் தரப்பட்டது. ஓர் அறிவிப்பின்படி, சுராக்கா திரும்பி வரும் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸுராக்காவிடம், "ஸுராக்காவே! (பாரசீக மன்னன்) கிஸ்ராவின் தங்கக் காப்புகள் உன் கைகளில் இருக்கும்போது, உன் நிலை எப்படி இருக்கும்?" என்று கேட்டார்கள். ஸுராக்கா வியந்து போய், 'கிஸ்ரா பின் ஹோர்முஸ்ஸா? என்று வினவினார். அதற்கு ஹுஸூர் (ஸல்) அவர்கள், "ஆம், அந்த கிஸ்ரா பின் ஹோர்முஸ்தான்" என்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் கிஸ்ராவின் தங்கக் காப்புகளும் கிரீடமும் இடுப்புக் கச்சையும் கொண்டுவரப்பட்டபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஸுராக்காவை அழைத்து, அவருக்கு அந்தத் தங்கக்காப்புகளை அணிவித்து, 'கிஸ்ரா பின் ஹோர்மிஸிடமிருந்து இவை இரண்டையும் பறித்து எமக்களித்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் எனக் கூறுவீராக' என்று கூறினார்கள்.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* காரணிகளை ஏற்பாடு செய்வதும், அவற்றைப் பயன்படுத்துவதும் பின்னர் அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை வைப்பதும் அவசியமாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இறை நம்பிக்கையைப் பற்றி குறிப்பிட்டவாறு இந்தக் கருத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார்கள்: எவருக்கு அல்லாஹ்வின் மீது உறுதியான நம்பிக்கை இருக்கிறதோ, அத்துடன் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அவன் என்னை படைத்துள்ளான் என்றும் உறுதியாக நம்புகிறாரோ அவர் எவ்வாறு செயலாற்றுவதைக் கைவிட முடியும்? அவரோ அனைவரையும் விட அதிகமாக அமல் செய்பவராக இருப்பார். ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அமல்கள் அன்னாருடைய ஈமானின் காரணமாகவே இருந்தன. ஏனெனில், ஓரிறைவன் இருக்கிறான் அவன் என்னை ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக படைத்துள்ளான் என்று புரிபவர் அந்த நோக்கத்தை அடைவதற்காக முயற்சியும் செய்வார்.

எனவே பாருங்கள்! ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சவ்ர் குகையில் அமர்ந்திருக்கும்போது தம் ஈமானை வெளிப்படுத்தி, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், "அபூபக்ரே, பதற்றமடையாதீர்! இறைவன் நம்முடன் இருக்கிறான்;

அவனே நம்மைப் பாதுகாப்பவன்” என்று கூறினார்கள். அதே நேரத்தில், அனைத்து இறை பணிகளும் தம்மிடமே ஒப்படைக்கப்பட்டிருப்பது போன்று ஹுஸூர் (ஸல்) அவர்கள் மார்க்கத்தின் பிற பணிகளில் இரவும் பகலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள்.

எனவே, பெருமானார் (ஸல்) அவர்கள் மனித திட்டமிடுதலை எந்த அளவுக்கு மேற்கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு அன்னார் அனைத்து உத்திகளையும் பயன்படுத்துவார்கள். பிறகே அல்லாஹ்வின் மீது தவக்குல் கொள்வார்கள். எனவே, மாநபி (ஸல்) அவர்களின் ஈமான் அறியாமையோ அல்லது சோம்பேரித்தனமோ கொண்ட ஈமான் அல்ல; மாறாக, பெருமானார் (ஸல்) அவர்களின் ஈமான் கண்ணால் கண்டறிந்த ஈமான் ஆகும். ஒரே நேரத்தில் இறை நம்பிக்கையும் கொண்டு செயலும் புரிகின்ற நபருடைய ஈமானே கண்ணால் கண்டுணர்ந்த ஈமான் ஆகும். அதாவது, (அவர்) அமல் மற்றும் தவக்குல் ஆகிய இரண்டையும் ஒருங்கே கொண்டிருக்கிறார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நம்முடைய நபி (ஸல்) அவர்களுக்கு 13 ஆண்டுகள் வரை மக்கா மாநகரில் ஏற்பட்ட அந்த இன்னல்களின் காலகட்டம் இருக்கிறதே! அந்தக் காலத்தின் வரலாற்றைப் படிக்கும் போது, மிகவும் தெள்ளத்தெளிவாகத் தெரியவருவதாவது, சோதனைகளின் போது, முழுமையான உண்மையாளர் மேற்கொள்ள வேண்டிய அந்த நல்லொழுக்கங்களை மேற்கொண்டார்கள். அதாவது, இறைவன் மீது முழு நம்பிக்கை வைத்தல், முறையிடுதலை விட்டும் விலகியிருத்தல், தமது பணியில் சோம்பல் காட்டாமல் இருத்தல் மற்றும் எவருடைய மதிப்பச்சத்திற்கும் உள்ளாகமல் இருந்தல் ஆகியவற்றை எந்த அளவுக்கு மேற்கொண்டார்கள் என்றால், இந்த உறுதியான நிலைத்திருத்தலைக் கண்டு ஈமான் கொண்ட நிராகரிப்பாளர்கள், ‘ஒருவருக்கு இறைவன் மீது முழு நம்பிக்கை இல்லாதவரை இந்த அளவுக்கு உறுதியாக நிலைத்திருக்கவும், துயரங்களைத் தாங்கிக் கொள்ளவும் முடியாது’ என்று சாட்சி பகரவும் செய்தார்கள்.

மதீனாவுக்கு வருகை தந்த பிறகும், நபி (ஸல்) அவர்கள் இறைவன் மீது முழு நம்பிக்கை வைப்பதுடன் வெளிப்படையான காரணிகளையும் பயன்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் சஹாபா பெருமக்களும் மதீனாவுக்கு வந்து அன்ஸாரிகள் அவர்களுக்குப் புகலிடம் அளித்தபோது, அரேபியா முழுவதும் அவர்களை எதிர்க்க ஒன்று சேர்ந்து விட்டது. முஸ்லிம்களின் நிலைமை எப்படி இருந்தது என்றால், அவர்கள் ஆயுதங்களின்றி இரவையும் கழிக்க மாட்டார்கள்; விடியலையும் காண மாட்டார்கள். அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை வைத்திருந்ததுடன் தமது தற்காப்புக்கான ஏற்பாட்டையும் செய்து வைத்துக் கொள்வார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் அறிவிப்பில் வருகிறது: ஒரு நாள் இரவு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் விழித்திருந்தார்கள். பிறகு, “என்னுடைய தோழர்களில் யாரேனும் ஒரு நல்ல மனிதர் இன்று இரவு எனக்குக் காவலுக்கு இருந்தால் நன்றாக இருக்குமே!” என்று கூறினார்கள். இதே நிலையில், ஆயுதங்களின் சத்தம் கேட்டது. விசாரித்தபோது, ஹஸ்ரத் சஃது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் தாம் நபி (ஸல்) அவர்களுக்குக் காவல் காப்பதற்காக வந்ததாகக் கூறினார்கள். மற்றொரு அறிவிப்பில் சஃது மற்றும் ஹுஸைஃபா ஆகியோர் வந்நததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் துஆ செய்து விட்டு உறங்கி விட்டார்கள். அந்த நேரமே இந்த வசனம் இறங்கியது:

وَاللّٰهُ يَعْصِمُكَ مِنَ النَّاسِ

{அதாவது, அல்லாஹ் உம்மை மனிதர்களிடமிருந்து பாதுகாப்பான் - 5:68}

இதற்குப் பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "மக்களே! இப்பொழுது நீங்கள் திரும்பிச் சென்று விடுங்கள். அல்லாஹ்வே என் பாதுகாப்பிற்குப் பொறுப்பேற்றுக் கொண்டான்" என்று கூறினார்கள். இதிலிருந்து தெரியவருவதாவது, அல்லாஹ்விடமிருந்து உறுதியளிக்கப்படாதவரை ஹுஸூர் (ஸல்) அவர்கள் வெளிப்படையான பாதுகாப்பு ஏற்பாட்டைச் செய்திருந்தார்கள். ஆனால் அல்லாஹ்விடமிருந்து பாதுகாப்பிற்கான உறுதியளிக்கப்பட்டதும், காவலை அகற்றி விட்டார்கள்.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:*

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பல்வேறு அரசர்களுக்குத் தப்லீக் கடிதங்களை அனுப்பியபோது (பாரசீக மன்னன்) கிஸ்ரா செருக்கினால் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் மடலைத் துண்டு துண்டாக கிழித்து விட்டான். நபி (ஸல்) அவர்களுக்கு இது தெரிய வந்தபோது, இறைவன் மீதான முழு நம்பிக்கையின் விளைவாக, "இறைவன் தானே அந்த மக்களைத் துண்டு துண்டாக சிதைப்பானாக" என்று கூறினார்கள். (பாரசீக மன்னன்) கிஸ்ரா ஏமனின் ஆளுநர் மூலமாக மாநபி (ஸல்) அவர்களை சிறைபிடிப்பதற்காக இரண்டு போர் வீரர்களை அனுப்பியிருந்தான். அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்குத் தம் எஜமானனின் கட்டளையைத் தெரிவித்தார்கள். அப்பொழுது ஹுஸூர் (ஸல்) அவர்கள் எந்தப் பதற்றமும் கொள்ளாமல், "இன்றிரவு இங்கு தங்கியிருங்கள், நாளை பதிலளிக்கிறேன்" என்று கூறினார்கள். மறுநாள் காலையில் அன்னார் அவர்களைத் திரும்பிச் செல்லுமாறு கூறினார்கள். மேலும் "ஏமனின் ஆளுநரிடம் சென்று, 'என் இறைவன் இன்றிரவு உன் இறைவனை கொன்றுவிட்டான்' என்று நான் கூறியதாகச் சொல்லுங்கள்" என்று கூறினார்கள். அதே இரவில் (கிஸ்ரா மன்னன்) ஃஹுஸ்ரு பர்வேஸை அவன் மகன் ஷேருவா சைரஸ் கொன்று விட்டான் என்பது பின்னர் தெரிய வந்தது.

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் போர்களுக்காகவும் முழுமையான தவக்குலுடன், அல்லாஹ்வின் அனுமதியுடன் செல்வார்கள். புறப்படும்போது இந்த துஆவைச் செய்வார்கள்:

اَللّٰهُمَّ أَنْتَ عَضُدِی وَأَنْتَ نَصِيرِی وَبِكَ أُقَاتِلُ

அதாவது, அல்லாஹ்வே! நீயே என் தோள். நீயே என் உதவியாளன். உன் மூலமாகவே நான் போரிடுகிறேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: மனிதனுக்கு சிரமங்களின் போது பதற்றம் ஏற்படத்தான் செய்கிறது; ஆனால், அவன் ஒருபோதும் இறைநம்பிக்கையை கைவிடக்கூடாது. அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கும் பத்ர் போரின் போது, கடும் பதற்றம் ஏற்பட்டது. அப்போது அன்னார், "இறைவா! இந்த கூட்டத்தை நீ அழித்துவிட்டால் பூமியில் எவரும் உன்னை ஒருபோதும் வழிபட

மாட்டார்” என்று மன்றாடி வந்தார்கள். ஆனால், ஹுஸூர் (ஸல்) அவர்களின் பதற்றம் மனிதர்களுக்கு இயல்பாக ஏற்படுதல் என்ற அடிப்படையில் மட்டுமே இருந்தது. ஏனெனில், மறுபக்கம் அன்னார் இறை நம்பிக்கையை ஒருபோதும் கைநழுவ விடவில்லை. அன்னாரது பார்வை விண்ணை நோக்கி இருந்தது. வல்ல இறைவன் என்னை ஒருபோதும் கைவிட மாட்டான் என்ற உறுதியான நம்பிக்கை அன்னாருக்கு இருந்தது. மனம் தளர்தல், மனச் சோர்வு மற்றும் நம்பிக்கையின்மை ஆகியவற்றை அருகில் வர விடவில்லை.

மனிதனின் நற்பண்புகள் மற்றும் (ஆன்மிகப்) படித்தரங்கள் முழுமை பெறுவதற்கும் இத்தகைய பதற்றங்கள் ஏற்படுவது அவசியம். ஆனால், மனிதன் நம்பிக்கையின்மையைத் தன்னை நெருங்க விடக்கூடாது. அதாவது, மனச் சோர்வு ஏற்படுதல், விரக்தி அடைதல் ஆகியவற்றை அருகில் வர விடக்கூடாது. ஏனெனில், அவநம்பிக்கை காஃபிர்களின் பண்பாகும். பல்வேறு விதமான சிந்தனைகள் மனிதனுக்குப் பதற்றம் எனும் ஐயத்தை ஏற்படுத்துகின்றன. ஆனால், ஈமான் அந்த ஐயப்பாடுகளை களைந்துவிடுகிறது. மனித இயல்பு பதற்றத்தை வாங்குகிறது; ஈமான் அதை விரட்டுகிறது.

அகழ்ப் போரில் முஸ்லிம்கள் மதீனாவில் இருந்து கொண்டே எதிரியை எதிர்கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தார்கள். இது தவக்குல் குறைபாடு காரணமாக கிடையாது; மாறாக, அது ஒரு போர் உத்தியாகும். எதிரியின் திடீர்த் தாக்குதலிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக மதீனாவைச் சுற்றி அகழி தோண்டப்பட்டது. முஸ்லிம்கள் கடும் வறுமை மற்றும் நெருக்கடி இருந்தும், அகழி தோண்டும் பணியில் கலந்து கொண்டார்கள்.

அகழ்ப் போரின் போதே நடந்த ஒரு நிகழ்வைப் பற்றி ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் அன்ஸாரி (ரலி) அவர்களின் அறிவிப்பில் வருகிறது: அகழி தோண்டிக் கொண்டிருக்கையில் ஒரு கடினமான பாறை வந்தது. மாநபி (ஸல்) அவர்கள் தாமே அதை உடைப்பதற்குக் கடப்பாரையை எடுத்தார்கள். ஆனால், நபி பெருமானார் (ஸல்) அவர்களின் வயிற்றில் கடுமையான பசியின் காரணமாக கல் கட்டப்பட்டிருந்தது. அன்னார் மூன்று நாள்களாக எதுவும் உண்ணவில்லை. ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் வீட்டுக்குச் சென்று சிறிது பார்லி மாவு மற்றும் ஒரு ஆட்டுக்குட்டியை வைத்து உணவுக்கான ஏற்பாட்டைச் செய்தார்கள்.

உணவு தயார் செய்து விட்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை உணவருந்த அழைத்தார்கள். ஆனால், ஹுஸூர் (ஸல்) அவர்கள் அனைத்து முஹாஜிர்களையும், அன்ஸாரிகளையும் உடன் அழைத்துக் கொண்டார்கள். சிறிதளவு உணவில் அல்லாஹ் பரக்கத் வழங்கினான். ஸஹாபா அனைவரும் வயிாற உண்டார்கள்; அவ்வளவு ஏன், உணவு மீதமாகியும் விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களின் மனைவியிடம், “இப்பொழுது இதை நீயும் சாப்பிடு, அன்பளிப்பாகவும் அனுப்பு. ஏனெனில், மக்கள் மிகவும் பசியுடன் இருக்கிறார்கள்” என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் பரா பின் ஆஸிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹுனைன் போரில் ஒரு தருணத்தில் முஸ்லிம்கள் பின்வாங்கி விட்டார்கள். ஆனால், நபி பெருமானார் (ஸல்) அவர்கள் போர்க்களத்தை விட்டு விலகவில்லை. ஹுஸூர் (ஸல்) அவர்கள்

தம்முடைய வெள்ளை நிறக் கோவேறு கழுதையில் இருந்தார்கள். அபூ சுஃப்யான் பின் ஹாரிஸ் பின் அப்தில் முத்தலிப் அதன் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தக் கவிதையைப் பாடிக் கொண்டிருந்தார்கள்:

أَنَا النَّبِيُّ لَا كَذِب أَنَا ابْنُ عَبْدِ الْمُطَّلِب

அதாவது, நான் நபி ஆவேன்; இதில் எந்தப் பொய்யும் இல்லை. நான் அப்துல் முத்தலிபின் மகன் (வழித்தோன்றல்) ஆவேன்.

பத்ர் போரின்போது, ஹபீப் பின் யஸாஃப் எனும் ஒரு ஆற்றல் பெற்ற வீரர் முஸ்லிம்களுடன் போரில் கலந்து கொள்ள விரும்பினார். ஆனால், அப்பொழுது வரை அவர் முஸ்லிம் ஆகியிருக்கவில்லை. அண்ணல் நபி (ஸல்) அவர்கள், “எங்களுடைய மார்க்கத்தில் இருப்பவர் மட்டுமே எங்களுடன் போருக்கு வர வேண்டும்” என்று கூறினார்கள். ஹபீப் பின் யஸாஃப் இரண்டாவது முறை மற்றும் மூன்றாவது முறை வந்தார். கடைசியில், மாநபி (ஸல்) அவர்கள், “நீ அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் மீது ஈமான் கொள்கிறாயா?” என்று கேட்டார்கள். அவர் ஆம் என்று பதில் அளித்ததனால் அவர் முஸ்லிம் ஆகி விட்டார். மேலும், மிகவும் வீர தீரமாக போரில் கலந்து கொண்டார். இதிலிருந்து தெரியவருவதாவது, உச்சக்கட்ட தேவை இருந்தும், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் வாக்குறுதிகள் மீது உறுதியான நம்பிக்கை வைத்து, முஸ்லிம் அல்லாதவர்களின் உதவியை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இன்றைய கால அறிவாளிகளின் பார்வையில் ஒருவரைத் தம் எதிரியாக ஆக்குவது தவறாகும். ஆனால், உண்மையைக் கூறப்போனால், இதுவும் உண்மைத்துவத்துக்கு ஒரு சான்றாகும். மாநபி (ஸல்) அவர்கள் எவருடனும் நல்லுறவைக் காப்பாற்றி வைத்துக் கொள்ளவில்லை; அனைவரையும் பகைத்துக் கொண்டார்கள். அந்த மக்களைப் பொறுத்தவரை, ஹுஸூர் (ஸல்) அவர்கள் தவறிழைத்து விட்டார்கள் - நவூதுபில்லாஹ். ஆனால், இறைவனுக்காக மட்டும் அனைவரையும் பகைத்துக் கொள்ளுதல் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்துக்குத் தெள்ளத் தெளிவான சான்றாகும். இதன் மூலம் ஹுஸூர் (ஸல்) அவர்களின் ஆன்மிக ஆற்றலின் நிலை தெரியவருகிறது.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى آلِ مُحَمَّدٍ وَّبَارِكْ وَسَلِّمْ إِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ

يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ

اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا

اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: முரப்பி அத்தாவுல் முஃக்னீ)**